# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 762/மா/2016

ஆணை எண். 42/2017

நாள் : 27/03/2017

**28.07.2016 நாளிட்ட**
**தினகரன் நாளிதழ் செய்தி** – தாமாக முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

**மண்டல அலுவலர்,**
**மண்டலம் – 9,**
**சென்னை மாநகராட்சி.** – எதிர் மனுதாரர்

"பெருநகர சென்னை மாநகராட்சியில், போலி வருகைப் பதிவேடு தயாரித்து வட்சக்கணக்கில் நூதன மோசடி" என்று தலைப்பிட்டு 28.07.2016 நாளிட்ட தினகரன் நாளிதழில செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட நாளிதழ் செய்திக் குறித்த நிகழ்வினை நிர்வாகச் சீர்கேடு எனக் கருதப்பட்டு 762/2016 எண்ணிட்ட வழக்காகப் பதிவு செய்யப்பட்டது. இச்செய்தி குறித்து உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

"பெருநகர சென்னை மாநகராட்சியில், போலி வருகைப் பதிவேடு தயாரித்து லட்சக்கணக்கில் நூதன மோசடி" என்று தலைப்பிட்டு 28.07.2016 நாளிட்ட தினகரன் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட நாளிதழ் செய்தியில் சுகாதாரப்பணியாளர்களின் வருகைப் பதிவேட்டில் கையெழுத்து போடாதவர்களைப் பணிக்கு வந்ததாக மோசடி செய்து லட்சக் கணக்கில் முறைகேடு என்றும் , 23.12.2015 முதல் 05.01.2016 முடிய உள்ள நாட்களில் திரு ராஜேஷ் மற்றும் 6 சுகாதாரப் பணியாளர்கள் வருகைப் பதிவேட்டில் கையெழுத்திடவில்லை எனினும் 30 நாட்களும் பணிக்கு வந்ததாக வருகைப் பதிவேடு தயாரிக்கப்பட்டு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது என்று செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், மாநகராட்சியில் நாளொன்றுக்கு ரூ. 288/– வீதம்

சுகாதாரப் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டும், இவற்றில் ரூ.240/– மட்டுமே ஒப்பந்ததாரர்கள் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்குகின்றனர் எனவும் செய்தியில் தெரிவிக்கப் பட்டிருந்தது. பணியாளர்கள் யாராவது விடுமுறை எடுத்தால் அந்த நாளையும் பணிக்கு வந்ததாக கணக்கில் கொள்ளப் படுகிறது என்றும் இதுபோன்ற முறைகேடுகள் 117–வது வார்டில் நடைபெறுகிறது என்று குறிப்பிட்டும் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

2. மேற்குறிப்பிட்ட நாளிதழ் செய்தி குறித்து, சென்னை மாநகராட்சி, 9–வது மண்டலத்தில் சுகாதார ஆய்வாளராகப் பணிபுரியும் திரு S.பிரபு அவர்களிடம் 14.03.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின் போது கீழ்க்காணும் விளக்கத்தினை அளித்தார்:-

"முன்பு சொர்ணஜெயந்தி நகர்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலம் கோட்டங்களில் குழுக்களாக அவர்கள் பணிபுரியும் காலத்தில் ஒரு நபருக்கு ரூ.289/- விதம் தினக்கூலியாக மொத்த பணத்தை அவர்களுக்கு அவர்களின் குழு பெயரின் மூலம் காசோலை வழங்கப்பட்டு குழு தலைவர் மற்றும் உப தலைவர் மூலம் வங்கி மூலமாக செலுத்தப்பட்டு, ஊதியம் வழங்கப்பட்டது. தற்பொழுது இத்திட்டம் இல்லை என்பதால் ஆகஸ்ட் 2015 முதல் J.K. Trans என்ற தனியார் நிறுவனத்தினமிருந்து ஒப்பந்தம் கோரப்பட்டு, அவர்களிடமிருந்து சுகாதார பணி செய்வதற்கு பணியாளர்கள் பெறப்பட்டு, பணி செய்து வருகின்றனர். பணி செய்த காலத்திற்கு ஒரு நபருக்கு ரூ.289/- அந்த நிறுவனத்திற்கு அரசாங்கத்தின் மூலம் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்நிறுவனம் தங்களிடம் பணிபுரிந்த ஒரு வேலையாளுக்கு நாள் ஒன்றுக்கு தலா ரூ.240/- மட்டும் ரூ.220/- தினகூலி அடிப்படையில் அவர்களுக்கு கொடுப்பார்கள். நேரடியாக மாநகராட்சியில் தற்காலிக பணியாளர்கள் சுகதார துறையில் பணிபுரியவில்லை. தனியார் நிறுவனத்திடமிருந்து பெற்ற திரு. ஆனந்த் என்ற பணியாளர் 9வது மண்டலத்தில் பணிபுரிந்தார். அவர் முறையாக வேலைக்கு வராமலும், முறையாக பணி செய்யாமலும் இருந்ததால் வேறு கோட்டத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் அவரோ தன்னை ஏற்கனவே பணிபுரிந்த கோட்டத்திற்கே மாற்றவேண்டும் என்று கூறினார். எனவே அவர் வேறு கோட்டத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதால் , தனிப்பட்ட காழ்புணர்ச்சி காரணமாக பத்திரிகை வாயிலாக (கோட்டம் 117)ன் மீது புகார் கூறியுள்ளார். எனவே பத்திரிக்கையில் வந்த செய்தி உண்மையானது இல்லை.

நாளிதழில் குறிப்பிடப்பட்ட திரு. ராஜேஷ், திரு. பாஸ்கர் மற்றும் திரு. பாண்டியன் மூன்று நபர்களும் 2015 டிசம்பர் மாதம் முழுவதுமே பணிக்கு வந்துள்ளனர். திரு. பாண்டியன் என்ற நபர் மட்டும் ஒரு நாள் பணிக்கு வரவில்லை. அதற்கு முந்தைய நாள் கூடுதலாக இரவு வரை மழைக்கால பணி செய்ததால் அவருக்கு அதையும் பணிக்காலமாக எடுக்கப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து வருகை பதிவேட்டில் விவரங்கள் பெற்று அதன் அடிப்படையில் மாநகராட்சியில் இருந்து நிறுவனத்திற்கு பணம் வழங்கப்படுகிறது. மாநகராட்சி நேரடியாக எந்த ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குவதில்லை. ஒவ்வொரு மாத முடிவிலும் பணி செய்த பணியாளர்களுக்கு ஒப்பந்த நிறுவனமே ஊதியத்தை வழங்கியுள்ளது. அதற்கு பின்பு தான் ஒப்பந்த நிறுவனம் அம்மாதத்திற்கான ஊதிய தொகையை மாநகராட்சியிடமிருந்து பெறும். மேலும் நாளிதழில் குறிப்பிட்டது போல் எந்தவித முறைகேடுகளும் நடைபெறவில்லை.".

3. மேலும், திரு S. சுகுமார் என்ற சுகாதாரப் பணியாளர் தான் J.K. Trans என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் மாநகராட்சியில் சுகாதாரப் பணியினை மேற்கொள்வதாகவும் தற்பொழுது நாளொன்றுக்கு ரூ.240/– வீதம் தினக்கூலி வழங்குவதாகவும், கடும் மழை, வெள்ளம் போன்ற நாட்களில் அதிகநேரம் வேலை செய்தால் மட்டுமே விடுப்பு எடுப்பதாகவும் விசாரணையின்போது தெரிவித்தார். மாநகராட்சி சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் சுகாதாரப்பணியாளர்கள் ஆகியோர் அளித்த வாக்குமூலங்களை ஏற்று மேல்நடவடிக்கை தேவையில்லை எனக்கருதி இந்நேர்வின் மீதான நடவடிக்கையை முடித்து கொள்ள இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2017– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 27–ஆம்** நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, **அலுவலக முத்**திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

5/4/2017
செயலாளர்.
28.3.17
28/3/17

பெறுநர்

**மண்டல** அலுவலர்,
மண்டலம் – 9,சென்னை மாநகராட்சி,
எண். 4, 4வது குறுக்குத் தெரு,
லேக்வியூ சாலை, சென்னை – 34.

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்